## கே.எம்.சி.எச் மருத்துவமனையில்

# நவீன ஆக்குபேஷனல் தெரபி சிகிச்சை

கோவை அக்.26: செயல்முறை மருத்துவம் என்று சொல்லப்படும் ஆக்குபேஷனல் தெரபி ஒரு பாராமெடிக்கல் மருத்துவதுறை ஆகும். பல மருத்துவ காரணங்களால் மூளை மற்றும் உடல் உறுப்புகள் செயல்படாமல் ஆகும் நிலையில் அன்றாட வேலைகளான சாப்பிடுதல் ஆடை அணிதல், வீட்டு வேலைகள் செய்தல் மற்றும் வேலைக்குச் செல்லுதல் போன்றவற்றை பிறரது உதவியால் மட்டுமே செய்ய முடியும் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு சிகிச்சை அளித்து, அவர்களை முடிந்தளவு சராசரி மனிதனைப்போல் தங்களது அன்றாட பணிகளை அவர்களே செய்யும் அளவிற்கு தயார்படுத்தும் மருத்துவத்துறையின் மறுவாழ்வு பிரிவே ஆக்குபேஷனல் தெரபி எனப்படும்.



சுஜாதா

ஆக்குபேஷனல் தெரபி குழந்தைகள் முதல் முதியோர் வரை யாவருக்கும் பயன்படும் சிகிச்சை முறையாகும்.

வயதுக்கேற்ற வளர்ச்சியற்ற குழந்தைகள்–மூளை முடக்குவாதம், பிறவிக் கோளாறு, ஆட்டிசம், அளவுக்கு அதிகமான துறுதுறுப்பு, கற்றலில் குறைபாடு, சிறுவர்களை பாதிக்கும் எலும்பு சம்பந்தமான நோய்கள், நடத்தைக் கோளாறு போன்றவை. பக்கவாதம், தண்டுவட முறிவு, சாலை விபத்தினால் மூளை பாதிக்கப்படுதல், தசை வலுவிழத்தல், பார்கின்சோனிசம் போன்ற காரணங்களால் கை, கால் செயல்படாத இருபாலர்க்கும் ஆக்குபேஷனல் தெரபி அவசியம்.

மனச்சிதைவு நோய், மன அழுத்தம், தேவையற்ற பயம், மது மற்றும் போதை பொருள்களுக்கு அடிமை ஆகியவற்றால் தன் வேலைகளை சரிவர செய்ய இயலாமை.

அதிக நேரம் ஒரே மாதிரியாக அமர்ந்து வேலை செய்வதினால் வரும் முதுகு, கழுத்து, மணிக்கட்டு வலி, வயோதிகத்தினால் வரும் குறைபாடுகள் ஆகியவற்றுக்கு ஆக்குபேஷனல் தெரபி சிகிச்சை முறையில் சிகிச்சை பெறலாம்.

ஆக்குபேஷனல் தெரபியில், குழந்தைகளுக்கு அமர, நிற்க, நடக்க பயிற்சி, ஆட்டிசம் குழந்தைகளுக்கு உணர்வுகள் மூலமாக பயிற்சி, கல்வி கற்பதற்கு மூலக்காரணமான கவனம், எழுத்து, புரிந்து கொள்ளும் திறமை போன்றவைகளை மேம்படுத்துதல்.

நடத்தை கணிப்பு சிகிச்சை, கை,கால்களுக்கு பயிற்சி அளித்து சரிவர இயங்க வைத்தல், அன்றாட வேலைகளில் பயிற்சி, மூளை பாதிக்கப்பட்டவர்களுக்கு உணர்வு சிகிச்சை மற்றும் மறதிக்கான சிகிச்சை, மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்றாட வேலைகளில் பயிற்சி, தன்னம்பிக்கை பயிற்சி அளிக்கப்படுகிறது.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்தவமனையில் 1995ம் ஆண்டு முதல் இத்துறை செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் பல இடங்களில் பயிற்சி பெற்ற தெரபிஸ்டுகள் இங்கு பணியாற்றி வருகிறார்கள். இப்பிரிவு காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை செயல்படுகிறது. மேலும் ஆக்குபேஷனல் தெரபி கல்லூரியும் (இளநிலை,முதுநிலை பட்டப்படிப்பு) இங்கு செயல்பட்டு வருகிறது.

மேலும் விபரங்களுக்கு டாக்டர்.சுஜாதா மிஸ்ஸல், முதல்வர்/ துறைத்தலைவர்–தொழில் வழி மருத்துவரை 4323731, 4323627 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல்: sujatamissal@gmail.com.